5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 10-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி.கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்

6. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆர். சிங்காரம் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவனாகிய நான், 1995-96 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை (10-வது சட்டமன்றப் பேரவை) அரசு உறுதிமொழிக் குழுவின் 30-வது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.